

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**

**இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநில மாநாட்டுக்காக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து, மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 26–11–2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, அன்பகத்தில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 23–11–2023.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு குழு கூட்டத்தில் கழக துணை பொது செயலாளர் இ. பெரியசாமி சிறப்புரை ஆற்றினார் உடன் கழக மாநில தேர்தல் பணி குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார், பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஆகியோர் உள்ளனர்.

சர்வாதிகாரப் போக்குடன் மாநில உரிமைகளைப் பறிக்கும்

# பா.ஜ.க.வை தேர்தலில் தோற்கடிப்பதே நமது இலக்கு!

## சிவகங்கை மாவட்டக் கழகக் கூட்டத்தில் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!


சிவகங்கை, நவ. 26 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவை தலைவர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம், இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன்மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை குறித்தும், நவம்பர் 27 இல் மாநில இளைஞரணி செயலாளர் பிறந்த நாள் குறித்தும், ஓ.என்.ஆர். படிவம் குறித்தும் விளக்கமாக பேசப்பட்டது. இது குறித்து சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரான உழவன் செந்தில் ,(காரைக்குடி), வி.பி. ராஜன் (திருப்பத்தூர்), தினேஷ் (மானாமதுரை) ஆகியோர் விளக்கிப் பேசினார்கள். தொடர்ந்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை. மாறன்,திருமதி. ஜோன்ஸ் ருசோ,கே.எஸ்.எம். மணிமுத்து, காரைக்குடி நாகர்கழக செயலாளர் என். குணசேகரன், சிங்கம்புணரி வடக்கு ஒன்றிய செயலாளர் பூமணி, ஆகியோர் பேசினார்கள். மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம் ஓ.என்.ஆர். படிவம் பூர்த்தி செய்ய வேண்டிய முறைகள் குறித்து விளக்கிப் பேசினார்.

மாநில இளைஞர் செயலாளரும் , அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம் வருகை குறித்தும் , வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்தும் மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

அடுத்த ஆண்டு ஜூன் 2024ல் பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. நாம் தேர்தல் பணியினை ஆறு மாதத்திற்கு முன்பாகவே துவங்கி விட்டோம் .கழக தலைவர் தளபதி அவர்கள் அறிவித்தவாறு நமது மாவட்டத்தில் பாக முகவர்கள் அமைத்தல், பூத் கமிட்டி உறுப்பினர்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது ஓ.என்.ஆர். படிவம் கொடுக்கப்பட்டுள்ளது . அதில் தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி, இளைஞர் அணியினர் அவசியம் இடம்பெறும் வகையில் அதனையும் விரைவாக பூர்த்தி செய்து இம்மாதம் முப்பதாம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.



வருகிற நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று முதல்வர் தளபதி அவர்கள் விரும்புகிறார். அதற்கு ஏற்ப நமது பணிகள் அமைந்திட வேண்டும். நமது இயக்கத்தை மூன்று தலைமுறைகளாக தொடர்ந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தலைமை வகித்து வரும் ஒரே இயக்கம் கழகமாகும். இதில் முதலில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைவராக தலைமையேற்று கட்சியை சிறப்பாக நடத்தினார். அதேபோல் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கட்சியை நடத்தி வருகிறார். தற்பொழுது இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் இளைஞரணியை சிறப்பாக நடத்தி வருகிறார். 3 தலைமுறைகளை கண்ட தலைமை இயக்கம் தி.மு.க. என்பது சிறப்பு ஆகும் . இத்தகைய சிறப்பு வேறு எந்த இயக்கத்திற்கும் இல்லை .

நாம் தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்தாலும் முழு அளவில் செயல்பட முடியவில்லை. மக்களுக்கு சுதந்திரமாக பணியாற்ற முடியவில்லை. அதற்கு காரணம் பா.ஜ.க ஆட்சி இல்லாத மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிக்கு பல்வேறு வகையில் நமது பணிக்கு முட்டுக்கட்டையினை ஒன்றிய பா.ஜ.க.அரசு செய்து வருகிறது. மாநிலத்தின் உரிமைகள் பறிக்கப்படுகிறது . மத்தியில் மாநில உரிமைகளை வழங்கும் வகையான அரசு அமைய வேண்டும். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்கள் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று பேசி வந்தார்கள். ஆனால் அது தற்பொழுது கேள்விக்குறியாக உள்ளது. பா.ஜ.கவின் துறையானது அமலாக்கத்துறையும், வருமானவரித் துறையும் பல்வேறு வகையான அச்சுறுத்தல் களை இடையூறுகளை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். ஆனால் அதற்கெல்லாம் கழகம் என்றும் பயந்ததில்லை. இத்தகைய பா.ஜ.க.வின்

சர்வாதிகார போக்கினை மாநிலத்தின் உரிமையை பறிக்கும் செயல்கள் குறித்து கழகத்தினர் மக்களிடம் விளக்கமாக எடுத்து கூற வேண்டும். பா.ஜ.க. இம்முறை தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது முக்கியமான இலக்காக அமைய வேண்டும்.

மாநில உரிமை காத்திடவும் ஜனநாயக முறையில் சுதந்திரமாக செயல்படவும் மத்தியில் நல்லாட்சி அமைய வேண்டும் என்பது அவசியமாகி விட்டது. மாநிலத்தின் உரிமைகளை பாதுகாத்திடும் ஆட்சி மத்தியில் அமைந்திட வேண்டும் . மத்திய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் இணக்கமாக ஆட்சி அமைய வேண்டும். அதற்கேற்ப நமது தேர்தல் பணி அமைந்திட வேண்டும் . நாம் நமது தேர்தல் பணியில் மெத்தனமாக இருந்து விடக்கூடாது. சிவகங்கை மாவட்டத்தில் தொய்வின்றி நம்முடைய தேர்தல் பணிகள் சிறப்பாக அமைந்திட வேண்டும் .புதிய வாக்காளர்களை கவனத்துடன் சேர்த்திட வேண்டும் . இதில் நாம் முழு அளவில் கவனம் செலுத்தி அனைவரும் ஒன்றுபட்டு தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.ஓ.என்.ஆர். படிவம் பூர்த்தி செய்வது குறித்து கூட்டங்களை அந்தந்த சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்களுடன் ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள் விரைவாக நடத்திட வேண்டும் . விரைவில் இந்த பணியினை முடித்திடுமாறு கேட்டுக்கொள் கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஓ.என்.ஆர் படிவத்தை முழு அளவில் பூர்த்தி செய்து இம்மாதம் 30ம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் ஒப்படைப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு இம்மாத இறுதியில் இளைஞர் அணி மாநாடு குறித்த பயிற்சி பாசறை விளக்கக் கூட்டம் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார்.

அதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட தீர்மானிக்கப் பட்டது. நவம்பர் 27ஆம் தேதி மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, கே.எஸ்.எம்.மணி முத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், , எஸ்.மாரியப்பன் கென்னடி, மாநில மாணவரணி இணை அமைப்பாளர் திருமதி பூரணசங்கிதா, செயற்குழு உறுப்பினர் தா. ராமையா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, ஏ.ஆர். ஜெயமூர்த்தி, அம்பல முத்து, சோமசுந்தரம், த.உதயகுமார், நகர்கழக செயலாளர்கள் என்.குணசேக. ரன், க.பொன்னுச்சாமி ,ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னதுரை, எஸ். சண்முக வடிவேல், பூமணி கே.பாலசுப்பிரமணியன், பி.செல்வராஜ், திருமலை முத்துராமலிங் கம்,எம். ஜெயரா மன், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், எம். அண்ணா துரை, துரை. ராஜாமணி ஆறு. செல்வராசன், வே. தமிழ்மாறன்,எம்.ஏ. கடம்பசாமி, கா.வெங்கட் ராமன், ஆர். எம். கென்னடி, வே. ஆரோக்கியசாமி, பூபால சிங்கம், நாகனி ரவி, கே.ஆர்.ஆனந்த், பேரூர் கழக செயலாளர்கள் ஆர். கார்த்தி கேயன், கதிர்வேல் , நாகூர்கனி, கே. பி. எஸ். பழனியப்பன், நஜுமுதீன், ராசு, அசோக், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ,மகளிரணி நிர்வாகிகள் மு.மணிமேகலை, திலகவதி கண்ணன், மார்கரெட் கமலா, பாக்கியலட்சுமி, தெரசா, மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம். முருகானந் தம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ. முத்து வளவன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர்கள் சிதம்பரம், சிங்கமுத்து, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன். சீமான்

சுப்பையா, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மானாமதுரை ஒன்றிய குழு துணை தலைவர் முத்துசாமி, மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அண்ணாமலை, சேகர் , விவசாய அணி பா.காளிமுத்து, பார்த்தசாரதி, ஷாஜகான், ஒன்றிய அணி துணைச்செய லாளர் முத்துக்குமார், புதூர்கண்ணன், சிறுபான்மை அணி சேவியர், சிவபுரி சேகர், இலக்கிய அணி அழகையா, இளைஞரணி பைரோஸ்கான், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், சேவியர் , ஷாஜகான், புகழேந்தி, குடோன்மணி, ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன் உட்பட ஏராளமானவர் கள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி நகரச் செயலாளர் என்.குணசேக ரன் நன்றி கூறினார்.

பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

# ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் 9 புதிய மருத்துவக் கட்டடங்கள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - மா.சுப்பிரமணியன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

திருப்பூர், நவ. 26-

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 22.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் 9 புதிய மருத்துவ கட்டடங்களை திறந்து வைத்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய தினம் பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலை யத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் 9 புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு 4வது முறையாக பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருந்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல் கிராமப்புறங்களுக்கு சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடியாதவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் சிறப்பாக பயன்பட்டு வருகிறது. நோய் ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த திட்டமாக உள்ளது. இந்த மருத்துவமுகாமில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களில் பாதிக்கப் பட்டவர்களின் இல்லத்திற்கே சென்று மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோர் சிகிச்சை அளிக்கின்றனர். மேலும், படுத்த படுக்கையில் உள்ள நோயாளிகளுக்கு மற்றும் இயன்முறை மருத்துவம் நோய்த் தடுப்பு பராமரிப்பு செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவ சிகிச்சையாளர் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் ” நடப்போம் நலம் பெறுவோம் “ (Health Walk) எனும் நடைபயிற்சி சிவன் மலை கிரிவலப்பாதையில் 8 கிலோ மீட்டர் தூரம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் தரவுகளின் படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கம் 28 சதவீதமும், இதய நோயின் தாக்கம் 30 சதவீதமும் குறைகின்றது என்று அறியப்படுகின்றது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 என்ற திட்டத்தினை செங்கல்பட்டு மாவட்டத்தில் துவக்கி வைத்தார்கள். சாலை விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுக்கும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வகுக்கப்பட்ட உன்னத திட்டம் இன்னுயிர் காப்போம் திட்டம். விபத்து நடந்த உடன் எவ்வித தாமதம் இல்லாமல் விபத்தில் சிக்கியவரை சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதும் அவர்களுக்கு உடனடி சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 மணி நேரம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாலை விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு முதல் 48 மணி நேரத்தை முக்கியமாக கருதி இத்திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய தினம் திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலை யத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் திருப்பூர் மாநகராட்சியில் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற பொது சுகாதார ஆய்வுக்கூடமும், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கேத்தனூர் துணை சுகாதார நிலையமும், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வடமலைபாளையம் துணை சுகாதார நிலையமும், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கெங்க நாயக்கன்பாளையம் துணை சுகாதார நிலையமும், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் எலவந்தி துணை சுகாதார நிலையமும்,

தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வரப்பாளையம் துணை சுகாதார நிலையமும், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கணியூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்தையும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பெருமாநல்லூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்தையும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.22.75 இலட்சம் மதிப்பீட்டில் செம்மிபாளையம் செவிலியர் குடியிருப்பு கட்டடத்தினையும் என ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் 9 புதிய மருத்தவ கட்டடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ரூ.4.30 கோடி மதிப்பீட்டில் 17 துணை சுகாதார நிலைய கட்டிடங்களும், ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ரூ.25.50 இலட்சம் மதிப்பீட்டில் 2 அரசு மருத்துவ மனைகளில் பல்வேறு பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ரூ.83.73 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் என 15 மருத்துவ கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொடர் சிகிச்சையாக 33,78, 651 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர். 454 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 23,575 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இன்னுயிர் காப்போம் நம்மைக காக்கும் 48 திட்டத்தின் கீழ் ரூ.5,39,84,627 மதிப்பீட்டில் 4,820 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இது வரை 119 சிறப்பு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 81,198 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கினங்க 27.06.2023 அன்று கோயமுத்தூர் மாவட்டம் மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இருதய நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் இருதய பாதுகாப்பு மருந்துகளான ஆஸ்பிரின் 2, க்ளோபிடோக்ரல் - 4, அட்ரோவாஸ்டாட்டின் - 8 என 14 மாத்திரைகள் வழங்கப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் இந்த திட்டம் 139 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் 15 துணை சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு 154 நபர்கள் பயன்பெற்றுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய தினம், பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் 9 புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மக்களைத் தேடி மருத்துவம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், நம்மை காக்கும் 48 திட்டம், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், பள்ளிசிறார் கண்ணொளி காப்போம் திட்டம், தேசிய குழந்தைகள் நலத் திட்டம் போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை மரு.செல்வவிநாயகம், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெகதீஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மண்டலத் தலைவர்கள் சி.கோவிந்த சாமி, தம்பி ஆர்கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி, திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.விஸ்வ நாதன், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வா கிகள், கழக துணை அமைப்புக ளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், புல்லங்குடி ஊராட்சி, அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நேற்று (25.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1028 பயனாளிகளுக்கு இபட்டாவினை மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், வழங்கினார்கள். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் உ.திசைவீரன், இராமநாதபுரம் நகர் மன்றத் தலைவர் ஆர் கே கார்மேகம், ஊராட்சி குழு பிரதிநிதி ரவிச்சந்திர ராமவன்னி, இராமநாதபுரம் ஒன்றிய தலைவர் கே.டி.பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜுலு ஆகியோர் உள்ளனர்.